**சாட்சிய வாக்கு மூலம்**

**(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)**

**பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர் ( வன்கொடுமை தடுப்பு ) சட்டம் -1989 -ன் வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,**

**திருவாரூர் - 610 001**

**தேதி:** 02.09.2025

| | | |
|---|---|---|
| **சிறப்பு அமர்வு வழக்கு எண்.** | : | 24/2025 |
| **சாட்சியின் வரிசை எண்.** | : | அ.சா-4 |
| **சாட்சியின் பெயர்** | : | மல்லிகா |
| **கணவர் பெயர்** | : | கிருஷ்ணன் |
| **கிராமம்** | : | மலையூர் |
| **தாலுக்கா** | : | கூத்தாநல்லூர் |
| **தொழில்** | : | விவசாயம் |
| **வயது** | : | 55 |

2025 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 02 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் உதவியாளராக பணிபுரியும் திருமதி. ஆர். அன்பரசி அவர்களால் இந்த சாட்சிக்கு 1969 ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

1,2 எதிரிகள் ஆஜர். அரசு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் வழக்கறிஞர் ஆஜராகி உள்ளனர்.

**<u>முதல் விசாரணை</u>**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். நான் இந்து பறையன் வகுப்பை சேர்ந்தவர். அ.சா-1 சூரியாவை எனக்கு தெரியும். ஆஜர் எதிரிகளை தெரியும். அவர்கள் உடையார் சாதியை சேர்ந்தவர்கள். கடந்த 5

வருடங்களுக்கு முன்பு நான் எதிரிகளின் வீட்டிற்கு அருகாமையில் உள்ள எனது வீட்டில் மதியம் 3.00 முதல் 4.00 மணி உள்ளாக இருந்தபோது ஒரே சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். எதிரிகள் வீட்டின் முன்பு பிரச்சனை நடந்து கொண்டிருந்தது. நான் போய் பார்த்தேன் அ.சா-1-ஐ எதிரிகள் அடித்து கொண்டிருந்தார்கள். அ.சா-1 -ஐ சாதி பெயரை சொல்லி அசிங்கமாக பேசினார்கள். அதன் பின்னர் நான் அவர்களை சமாதானம் செய்துவிட்டு எனது வீட்டிற்கு வந்துவிட்டேன். மேற்படி சம்பவம் குறித்து போலீசார் என்னை விசாரித்தார்கள். அதன் பின்னர் காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார் நடந்த விவரம் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>** இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம்செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2025.09.02 16:10:22 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.